**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்ற சீராய்வு வழக்கு எண்.59/2024**
(CNR No: TNTP01-003353-2024)

N.ஜெயா,
க/பெ.நாகராஜ்,
கதவு எண்.2/43,
மயிலரங்கம், செவந்திபுரம்,
லால்குடி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். ...சீராய்வு மனுதாரர்/மனுதாரர்/ மனைவி

// எதிர் //

S.நாகராஜன்,
த/பெ.சுப்புரமணியன்,
பா/பெ.சேகர்,
கதவு எண்.39-A,
திருவள்ளுவர் நகர்,
லால்குடி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி.
**தற்போது:**
கோட்டாரகொல்லை,
குடித்தெரு, ஆங்கரை,
லால்குடி தெரு,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ கணவர்

இம்மனு, கடந்த 15.07.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், சீராய்வு மனுதாரர்/மனுதாரர்/மனைவி தரப்பில், வழக்கறிஞர் திரு.V.சுப்புரமணியன் அவர்களும், எதிர்மனுதாரர்/

மனுதாரர்/கணவர் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வழக்கினை நடத்த, விசாரணை நீதிமன்ற உத்தரவு மற்றும் மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்னர், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து பிறப்பிக்கும்

## உத்தரவு

1) இந்த சீராய்வு மனுவானது, சீராய்வு மனுதாரர்/மனுதாரர்/மனைவி தரப்பில், குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 397(1) மற்றும் 399 ன் கீழ், இலால்குடி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், M.C.No.1/2022 ல் 12.04.2023 அன்று மனுதாரர்/மனைவிக்கு, அசல் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வாழ்க்கை பொருளுதவியாக மாதம் ரூ.3,000/-ஐ ஒவ்வொரு பிரதி மாதம் 5 ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்று பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்து, வாழ்க்கை பொருளுதவியாக மாதம் ரூ.12,000/- ஆக உயர்த்தி மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து செலுத்தக் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்த சீராய்வு மனுவில் விவாதிக்க வசதியாக இருக்கும் பொருட்டு, விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களின் தகுதி நிலையே, இந்த சீராய்வு மனுவிலும் எடுத்தாளப்படுகிறது.

3) **<u>விசாரணை நீதிமன்றத்தில் சீராய்வு மனுதாரர்/ மனுதாரர்/ மனைவி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:</u>**

3.1) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.06.1973 தேதியன்று இலால்குடி மயிலரங்கம், எதிர்மனுதாரரின் வீட்டில் வைத்து இந்து சமய சம்பிரதாய முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு. மனுதாரர், எதிர்மனுதாரரின் வீட்டில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர். இவர்களது திருமணத்தின் பயனாக சிவமணி, சுரேஷ்குமார் என்ற இரண்டு ஆண் வாரிசுகளும், குணவதி என்ற பெண் வாரிசும் பிறந்துள்ளனர். பின்பு. எதிர்மனுதாரர், மனுதாரரின் திருமணம் சகோதரியான வளர்மதி என்பவரை இரண்டாவதாக செய்துள்ளார்.

3.2) எதிர்மனுதாரர், அவரது இரண்டாவது மனைவியான வளர்மதியின் பேச்சை கேட்டுக்கொண்டு, மனுதாரரையும் மற்றும் அவரது குழந்தைகளையும் அடித்து துன்புறுத்தி, எந்த அத்தியாவசிய பொருட்களும் வாங்கிக் கொடுக்காமல் எதிர்மனுதாரர் தனது இரண்டாவது மனைவியுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில். மனுதாரருக்கும், அவரது குழந்தைகளுக்கும் உள்ள அனைத்து செலவுகளையும் மனுதாரரின் சகோதரரான பிரபாகர் என்பவர் தான் செய்து கவனித்து வந்துள்ளார். பின்பு மனுதாரரின் மகளான குணவதியை தனது சகோதரர் பிராபாகரனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார். அந்த திருமணத்திற்குரிய செலவுகள்

அனைத்தும் மனுதாரர் தான் செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் தனது மூன்று குழந்தைகளுக்கும் எந்தவித செலவுகளும் செய்யவில்லை. எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கணவன் என்ற முறையில் பராமரிக்க தவறிவிட்டதாகவும், அதேபோல் அவரது பிள்ளைகளுக்கும் தந்தை என்ற முறையில் எவ்வித செலவுகளும் செய்யவில்லை. எதிர்மனுதாரர் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, மாத ஓய்வூதியம் ரூ.35,000/- பணம் பெற்று வருகிறார். மேலும், எதிர்மனுதாரர் இலால்குடியில் சொந்தமான வீடும், குத்தகைக்கு நிலம் மற்றும் ஓய்வு பெற்ற பெருந்தொகையும் வைத்துள்ளார். எதிர்மனுதாரர், மனுதாரரை எவ்வித சட்டப்பூர்வ காரணமுமின்றி மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் இல்லத்திலிருந்து விரட்டியுள்ளார்.

3.3) மனுதாரர் கடந்த 21.09.2021-ம் தேதியன்று எதிர்மனுதாரர் மீது இலால்குடி. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது, அந்த விசாரணைக்கு வந்த எதிர்மனுதாரர், மனுதாரரை பராமரிக்க முடியாது என்றும், எந்தவித தொகையும் கொடுக்க முடியாது என்றும் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளட்டும் என்று கூறிவிட்டு சென்றுள்ளார். மனுதாரரை இதுநாள் வரை பராமரித்து வந்த மனுதாரரின் சகோதரர் மற்றும் மகன்கள் அவர்களது வாழ்வை பொருளாதார ரீதியாக நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டதால், கணவர் என்ற முறையில் எதிர்மனுதாரர்,

மனுதாரருக்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம் மருத்துவம் மற்றும் அடிப்படை தேவைகளை செய்து தர வேண்டும். ஆகவே மனுதாரர் தனக்கு வாழ்க்கை பொருளுதவியாக மாதம் ரூ.10,000/- எதிர்மனுதாரர் வழங்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) எதிர்மனுதாரர்/கணவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

5) **<u>சீராய்வு மனு தாக்கல் செய்தமைக்கான காரணங்கள்:-</u>**

5.1) விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு சட்டத்திற்கும், சாட்சியங்களின் உண்மைத்தன்மை மற்றும் வழக்கின் சாத்தியக்கூறுகளுக்கும் எதிராக உள்ளது. கற்றறிந்த நீதித்துறை நடுவர், சீராய்வு மனுதாரரின் தரப்பு வாதத்தை கருத்தில்கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்ற உத்தரவு சட்டத்திற்குப் புறம்பானது. கற்றறிந்த நீதித்துறை நடுவர், சீராய்வு மனுதாரரின் கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை.

5.2) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.06.1973 அன்று லால்குடியில் திருமணம் நடைபெற்று, அவர்கள் எதிர்மனுதாரரின் வீட்டில் திருமண வாழ்க்கையைத் தொடங்கினர். இத்திருமணப் பந்தத்தின் மூலம் என்.சிவமணி, என்.சுரேஷ்குமார் மற்றும் என்.குணவதி ஆகிய மூன்று

குழந்தைகள் பிறந்தன. திடீரென்று எதிர்மனுதாரர், மனுதாரரின் சகோதரியை 2 வது திருமணம் செய்துள்ளார். 2 வது திருமணத்திற்குப் பிறகு, எதிர்மனுதாரர் தனது 2 வது மனைவி வளர்மதியின் தவறான வழிகாட்டுதலால் மனுதாரரைப் பராமரிக்காமல் கைவிட்டு, அவருக்கு உணவு, இருப்பிடம் போன்றவற்றை வழங்காமல் அலட்சியப்படுத்தித் துன்புறுத்தியுள்ளார்.

5.3) குழந்தைகளின் கல்வி, திருமணம் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் மனுதாரரே ஏற்றுக்கொண்டுள்ளார். எதிர்மனுதாரரும் அவரது 2 வது மனைவியும் மனுதாரருடன் தகராறு செய்து, அவரைத் தீவிரமாகத் தாக்கி, வீட்டை விட்டுத் துரத்திவிட்டனர். இதனால் மனுதாரர் எவ்வித ஆதரவுமின்றி தவித்து வந்துள்ளார். எனவே, மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்தார். விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் ஆஜராகாததால், அவர் ஒருதலைபட்சமாக அறிவிக்கப்பட்டார். எதிர்மனுதாரர் வழக்கை எதிர்த்து வாதாடாத நிலையிலும், கற்றறிந்த நீதித்துறை நடுவர் மனுதாரரின் வாதத்தைக் கருத்தில்கொள்ளாமல், எதிர்மனுதாரரின் வருமானம் நிரூபிக்கப்படவில்லை என்றும், மாதம் ரூ.3,000/- மட்டுமே ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிட்டார்.

5.4) ஆனால், எதிர்மனுதாரர் 07.04.1978 முதல் 'நேஷனல் இன்சூரன்ஸ்' நிறுவனத்தில் பணியாற்றி, 31.05.2010 அன்று ஓய்வுபெற்று, மாதம் ரூ.35,000/-க்கும் மேல் ஓய்வூதியம் பெற்று வருகிறார். மேலும். குத்தகை நிலங்கள் மற்றும் வீட்டு வாடகை மூலம் மாதம் சுமார் ரூ.50,000/- வருமானம் பெறுகிறார். இவையனைத்தும் எதிர்மனுதாரரின் வருமானத்திற்குத் தெளிவான ஆதாரங்களாகும். எதிர்மனுதாரர் ஆஜராகி வழக்கை எதிர்த்திருந்தாலும், அவரது வருமானத்தை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரரையே சார்ந்திருக்கும்.

5.5) எனவே, கற்றறிந்த நீதித்துறை நடுவர் எதிர்மனுதாரரின் வருமானம் குறித்துத் தவறான முடிவுக்கு வந்துள்ளார். இதனால் அவர் வழங்கிய ஜீவனாம்சத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. தற்காலத்தில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 3 வேளை உணவிற்குச் சுமார் ரூ.200/- செலவாகும் நிலையில், நீதித்துறை நடுவர் ஒரு நாளைக்கு ரூ.100/- மட்டுமே வழங்கியுள்ளார். இதுதவிர, இருப்பிடம், உடை மற்றும் பிற அத்தியாவசியத் தேவைகளுக்கு குறைந்தபட்சம் ரூ.200/- தேவைப்படுகிறது. ஆக ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.400/-ம், மருத்துவச் செலவுகளுக்கு நாளொன்றுக்கு ரூ.100/-ம் செலவாகும். எனவே. மனுதாரர் ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- கோரும் கணக்கீடு சரியானது. ஆகவே, கற்றறிந்த நீதித்துறை நடுவர் ஒரு தனி நபரின்

வாழ்வாதாரச் செலவு ஒரு நாளைக்கு ரூ.500/– என்பதைப் பரிசீலிக்கத் தவறிவிட்டார். எனவே, வழங்கப்பட்ட ஜீவனாம்சத்தொகை மிகவும் குறைவாக உள்ளது. இந்தச் சொற்பத் தொகையைக் கொண்டு எந்தவொரு நபராலும் வாழ முடியாது. ஆகவே, மாதம் ரூ.3,000/– ஜீவனாம்சம் என்ற உத்தரவு நியாயமற்றது; அத்தொகையை மாதம் ரூ.12,000/– ஆக உயர்த்தி வழங்க வேண்டும். எனவே, சீராய்வு மனுதாரர் ஜீவனாம்சத் தொகையை மாதம் ரூ.12,000/– ஆக உயர்த்தக் கோரி இந்த சீராய்வு மனுவைத் தாக்கல் செய்கிறார். இச்சீராய்வு மனு அனுமதிக்கப்படாவிட்டால், மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் எனவே, இந்த மேல்முறையீட்டை அனுமதித்து விசாரணை நீதிமன்ற உத்தரவை ரத்த செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

6) விசாரணை நீதிமன்றத்தில், மனுதாரர்/மனைவி தரப்பில், அவர் தன்னை மா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். அவர் மூலம் ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7) இந்த சீராய்வு மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:**

1. சீராய்வு மனுதாரர்/மனுதாரர்/மனைவி தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள இயலாமல் உள்ளாரா?

2. அவருக்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய வாழ்க்கைப் பொருளுதவி ஏற்கத்தக்கதா?

3. இந்த சீராய்வு மனுவில் கூறியுள்ள காரணங்களை விசாரணை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டதா?

4. இந்த சீராய்வு மனு அனுமதிக்கத்தக்கதா?

5. விசாரணை நீதிமன்றம் வழங்கிய வாழ்க்கை பொருளுதவித் தொகை மாற்றியமைக்கத்தகுந்ததா?

6. வேறு பரிகாரம் என்ன?

**8) <u>பிரச்சனை எண்கள் 1 முதல் 6 க்கான தீர்வு:</u>**

மேற்படி 6 பிரச்சனைகளிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் அவற்றுக்கு பொதுவாக விடையளிக்க வேண்டியுள்ளது.

9) சீராய்வு மனுதாரர்/மனுதாரர்/மனைவி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த சீராய்வு மனுவில் கூறியுள்ள விபரங்களையே விவரித்து கூறி, விசாரணை நீதிமன்றம் சீராய்வு மனுதாரர்/மனைவி தரப்பில் தாக்கல் செய்த வாய்மொழி சாட்சியங்களை முறையாக பரிசீலிக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி அரவது தரப்பை நிரூபிக்கப்படவில்லையென்றும், விசாரணை

நீதிமன்றம் அன்றாட வாழ்க்கை தேவைக்காக மாதம் ரூ.3,000/- மட்டுமே ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிட்டது மிகவும் குறைவானது என்றும், எதிர்மனுதாரருக்கு ஓய்வூதியமாக மாதம் 35,000/- வருகிறது என்பதையும் அவருக்கு சொந்த வீடு, ஓய்வு பெற்றபோது பெறப்பட்ட தொகை ஆகியவற்றிலிருந்தும் உரிய வருமானம் உள்ளது என்றும், எனவே, விசாரணை நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ரத்து செய்து மாதம் ரூ.12,000/- ஓய்வூதியமாக வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் வாதிட்டார்.

10) சீராய்வு மனுதாரர்/மனுதாரர் தரப்பு கருத்துக்களும், விசாரணை நீதிமன்ற வழக்காணவங்களும், மேல்முறையீட்டுக்கான காரணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இந்த சீராய்வு மனுதாரர்/மனைவிக்கும், எதிர்மனுதாரர்/கணவருக்கும் 27.06.1973 ல் திருமணம் நடைபெற்றது என்பதும், இவர்களது திருமணத்தின் பயனாக சிவமணி, சுரேஷ்குமார் என்ற இரண்டு ஆண் வாரிசுகளும், குணவதி என்ற பெண் வாரிசும் பிறந்துள்ளனர். பின்பு, எதிர்மனுதாரர், மனுதாரரின் சகோதரியான வளர்மதி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார் என்பதும் மனுதாரரின் சாட்சியத்தின் மூலமும், ஆவணங்கள் மூலம் தெளிவாகிறது.

11) மேலும், விசாரணை நீதிமன்றம், இந்த சீராய்வு மனுதாரர்/மனைவி அவரது கணவரான எதிர்மனுதாரர்/கணவர் நேஷனல் இன்சூரன்ஸ்

கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, மாத ஓய்வூதியம் ரூ.35,000/-பணம் பெற்று வருவதாக கூறியுள்ள நிலையில், அதனை மறுத்து எதிர்மனுதாரர்/கணவர் நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர்/மனைவியை குறுக்கு விசாரணை எதுவும் செய்யவில்லை. அவர் தரப்பில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்/கணவர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை எதுவும் தாக்கல் செய்யாததால் 12.09.2025 அன்று தோன்றாத்தரப்பாளராக்கப்பட்டுள்ளார். எனவே, மனுதாரர் தரப்பு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மேலும், எதிர்மனுதாரர்/கணவர் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, மாத ஓய்வூதியம் ரூ.35,000/-பணம் பெற்று வருவதாகவும், சொந்த வீடு, குத்தகை நிலம், ஓய்வூதிய பணப்பலன் ஆகியவை அவருக்கு உள்ளதாக கூறியுள்ள நிலையில், அதனை நிரூபணம் செய்ய சொத்து பற்றிய ஆவணம் மற்றும் வங்கிக் கணக்கு புத்தகம் எதுவும் மனுதாரர்/மனைவி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. எனினும், சீராய்வு மனுதாரருக்கு, கணவன் என்ற முறையில் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் எதிர்மனுதாரருக்கு உள்ளது.

13) மேலும், இருவரது வயதைக் கருத்திற்கொண்டு மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்ததிலிருந்து ரூ.12,000/- மாத ஜீவனாம்சம் கோரப்பட்டாலும், விலைவாசி மற்றும் மனுதாரருக்கு ஆகும் பராமரிப்பு மற்றும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச் செலவு ஆகியவற்றின் செலவினங்களை மேற்கொள்வதற்காக, ஜீவனாம்சமாக ரூ.7,500/- மாதந்தோரும் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து செலுத்த வேண்டுமென உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என முடிவு செய்யப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, விசாரணை நீதிமன்ற உத்தரவு மேற்கண்டவாறு மாற்றியமைக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது. மேலும், எதிர்மனுதாரர்/கணவர் மேற்படி தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குக் கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப்படுகிறது.

14) **முடிவாக,**

இந்த சீராய்வு மனு பின்வருமாறு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

(1) விசாரணை நீதிமன்ற ஜீவனாம்ச வழக்கு எண்.1/2022 ல், 12.04.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

(2) சீராய்வு மனுதாரர்/மனைவிக்கு, சீராய்வு எதிர்மனுதாரர்/கணவர் மாதந்தோரும் ரூ.7,500/- ஜீவனாம்சமாக, விசாரணை நீதிமன்றத்தில், மனு

தாக்கல் செய்த தேதியிலிருந்து, செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மேலும், எதிர்மனுதாரர்/கணவர் மேற்படி தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதம் 5ம் தேதிக்குக் கொடுக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

(3) எதிர்மனுதாரர்/கணவர், விசாரணை நீதிமன்ற உத்தரவுப்படி, ஏற்கனவே ஏதேனும் ஜீவனாம்சத் தொகை சீராய்வு மனுதாரருக்கு செலுத்தியிருப்பின், அதை மேற்படி மாற்றியமைக்கப்பட்ட தொகையில் கழித்துக்கொள்ளலாமென முடிவு செய்யப்படுகிறது. இந்த சீராய்வு மனுவைப் பொறுத்து செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.31 13:54:14 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

**நகல்**
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலால்குடி.